# பெ.சண்முகத்தின் உண்மை முகம் - 1

**ப.திருமாவேலன்**

குற்றம் உள்ளநெஞ்சு குறுகுறுக்கும் என்பதைப் போல மே மாதம் 8 ஆம் தேதி எடுத்த முடிவுக்கு ஜூன் மாதம் 19ஆம் தேதியன்று விளக்கம் அளித்து மிக நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம். ‘புதிய அரசியல் சூழலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடும்’ என்று பெரிய தத்துவார்த்த தலைப்பைச் சூட்டி இருக்கிறார். ஏதோ தமிழ்நாட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைந்து விட்ட மகிழ்ச்சியில் அந்தக் கட்டுரை தீட்டப்பட்டுள்ளது.

விஜய் ஆட்சி அமைக்க ஆதரவு என்ற நிலைப்பாடு மார்க்சிய, லெனினிய, கம்யூனிச, சோசலிச நிலைப்பாடு என்பதாக சண்முகம் நினைத்துக் கொண்டு ஒரு பக்கத்துக்கு நீட்டி முழங்கி இருக்கத் தேவையில்லை.

★ **குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடும்.**

★ **தேர்தல் வந்துவிடும்**

என்று சொல்வது எல்லாம் உலகப் பம்மாத்து ஆகும். சண்முகத்தின் உண்மையான நோக்கம், ‘திராவிடக் கட்சி இல்லாத ஆட்சி அமைய ஆதரவு’ என்பதுதான். அதனால்தான் த.வெ.க. ஆட்சியை விழுந்தடித்து போய் ஆதரித்துள்ளோம் என்பதை சண்முகமே கக்கி விட்டார்.

‘புதிய அரசியல் சூழல்’ என்று அவர் சொல்ல வருவது.. “ தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வைத் தேர்ந்தெடுப்பது மட்டும்தான் மக்களுக்கு இருந்த வாய்ப்பு என்று கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் ‘இரு துருவ ஆட்சி’ நிலவிய நிலைக்கு இந்தத் தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பது முக்கிய திருப்புமுனை ஆகும்” என்று தனது உண்மையான மகிழ்ச்சியை சண்முகம் வெளிப்படுத்தி இருக்கிறார். மேற்கு வங்கத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை, மீண்டும் மம்தா ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்று நினைத்தார்களே அதைப் போல!

**சண்முகம் இந்தக் கட்டுரையை எழுதி வெளியிட்ட அன்று, இவருக்கு முன்னதாக செயலாளராக இருந்த கே.பாலகிருஷ்ணன் அளித்த பேட்டியில், ‘ திராவிட ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க 1989 ஆம் ஆண்டில் இருந்து முயற்சித்து வருகிறோம்’ என்று சொல்லி இருக்கிறார். இவர்கள் எல்லாம் பி.ராமமூர்த்தி டானிக்கில் வளர்ந்தவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். திராவிட இயக்க ஒவ்வாமை ஒன்றுதான் இவர்களது இலக்கணம். அதனால்தான் விஜய்யிடம் ஆதரவுக் கடிதத்தைக் கேட்டு வாங்கி இவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.**

ஆதரவுக் கடிதம் இல்லாமல் காங்கிரஸ் ஆதரித்ததற்கும், ஆதரவுக் கடிதத்தை கம்யூனிஸ்ட்டுகள் கேட்டு வாங்கியதற்கும் பெரிய வித்தியாசம் ஏதுமில்லை.

திராவிட ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒரு தேர்தலில் தி.மு.க.வுடன் சேர்ந்து அ.தி.மு.க.வையும், மறு தேர்தலில் அ.தி.மு.க.வுடன் சேர்ந்து தி.மு.க.வையும் தோற்கடிக்கப் பார்ப்பதுதான் அவர்களுக்குத் தெரிந்த தேர்தல் உத்திகள் ஆகும். மக்கள் நலக் கூட்டணி வைத்து மண்ணைக் கவ்வியதையும் தமிழ்நாடு பார்த்துள்ளது. முப்பது ஆண்டுகளாக இவர்களது தேர்தல் உத்தி இது ஒன்றுதான். இவர்களுக்கு இப்போது விஜய், கலங்கரை விளக்கமாகத் தெரிகிறார். உண்மையான மாற்றம் என்பது கம்யூனிஸ்ட்டுகளுக்குத்தான் கிடைத்திருக்கிறது. புதிய பல்லக்கு!

**இந்தத் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத ஒரு கட்சி கூடுதல் இடங்களைக் கைப்பற்றியதும் உடனடியாக அதனை ஆதரிக்க சண்முகம் முடிவெடுத்துவிட்டார். மற்றபடி குடியரசுத் தலைவர் ஆட்சி அமைந்துவிடும் என்பதெல்லாம் சண்முகத்தின் அதீத கற்பனை ஆகும்.**

அமைச்சர் பதவி தருகிறோம், வாரியம் தருகிறோம், இன்னும் பல தருகிறோம் என்று ஆசை வார்த்தைகள் காட்டப்பட்டு, குதிரை பேரம் மட்டுமல்ல, எல்லாப் பேரமும் நடத்தப்பட்டு அ.தி.மு.க.வைச் சேர்ந்த 25 உறுப்பினர் ஆதரவை விஜய் வாங்கி விட்டார். எனவே இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக் ஆதரவு தரவில்லை



என்றாலும் தனது பெரும்பான்மையை நிரூபித்திருப்பார் விஜய்.

த.வெ.க.வின் 107 என்ற எண்ணிக்கையுடன் அ.தி.மு.க. உறுப்பினர்கள் 25 பேரின் வாக்குகளையும் சேர்த்தால் 132 வாக்குகள் வந்துவிட்டது. எனவே, குடியரசுத் தலைவர் ஆட்சி வராமல் தடுப்பதற்காக ஆதரித்தோம் என்று சண்முகம் சொல்வதே ஊரை ஏமாற்றும் பசப்புவாதம் ஆகும்.

‘யார் ஆட்சி அமைத்தாலும் இடதுசாரிகள் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாது என்பதுதான் நிலைமை. எனவே இந்த மிக முக்கியமான பொறுப்பைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறையுடன் கட்சி இதை அணுகியது” என்று மார்தட்டிக் கொள்கிறார் சண்முகம்.

தி.மு.க. கூட்டணியில் வென்ற நான்கு கட்சிகளின் ஆதரவைப் பெற்ற பிறகு, இந்தக் கட்சிகளை உண்மையில் நம்பி இருந்தால் அ.தி.மு.க. தயவை நாடி இருக்க மாட்டார் விஜய்.

பெ.சண்முகம் போன்றவர்களை விட விஜய் அதிகம் நம்பியது சி.வி.சண்முகத்தைத்தான். அ.தி.மு.க. எதிர்ப்பை கூர்மையாகப் பேசும் பெ.சண்முகம், சி.வி.சண்முகம் வீட்டுக்கு விஜய் போனதும், ‘த.வெ.க. ஆட்சிக்கு ஆதரவு இல்லை’ என்று அறிவித்திருந்தால் அவரைப் பாராட்டலாம்.

**144 உறுப்பினர் ஆதரவுடன் விஜய் தனது பெரும்பான்மையை நிரூபித்து உள்ளார். இதில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 25 உறுப்பினர் ஆதரவும் இருக்கிறது. அ.தி.மு.க. தயவுடன் அமைந்துள்ள ஆட்சியை ஆதரிப்பது சண்முகத்துக்கு கேவலமாகத் தெரியவில்லையா? சி.வி.சண்முகமும் பெ.சண்முகமும் ஒரே நேர்கோட்டில்தான் நிற்கிறார்கள். கொள்கைப் புடலங்காய் ஏதுமில்லை.**

**தொடரும்**

## கல்வி காவிமயம்! மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் ‘நீட்’ தேர்வு!

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து சென்னையில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணியினர் அலைகடலென திரள்கின்றனர்!

**சென்னை, ஜூன் 23 -**

**“கல்வி காவிமயம், மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் ‘நீட்’ தேர்வு! ஒன்றிய மோடி பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம், கழக மாணவர் அணி சார்பில் இன்று சென்னை - சைதாப்பேட்டையிலுள்ள கலைஞர் பொன்விழா வளைவு அருகில் காலை 9 மணியளவில் நடைபெறுகிறது.**

இதுகுறித்து கழக மாணவர் அணிச் செயலாளர் ஜெ.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பாசிச பா.ஜ.க. அரசால் இந்தியா முழுவதும் திணிக்கப்பட்ட ‘நீட்’ தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் மோசடிகள் முறைகேடுகள் அம்பலப்பட்டு வருகின்றன.

கழக ஆட்சியில் ‘நீட்’ தேர்வில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த ஆண்டு நடைபெற்ற ‘நீட்’ தேர்வு இரத்து செய்யப்படுவதாக அறிவித்ததிலிருந்து மறு தேர்வு அச்சத்தால் இந்தியா முழுவதும் 15 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டு செத்து மடிகின்றனர். இது பாசிச மோடி அரசால் நிகழ்த்தப்படும் பச்சைப் படுகொலையாகும்.

இத்தகைய நுழைவுத் தேர்வுகளையும் ‘தகுதி’த் தேர்வுகளையும் இரத்து செய்யக் கோரி பாசிச மோடி அரசினை தி.மு.கழகம் தொடர்ந்து நிர்பந்தித்து வருகிறது.

அதேபோல் ஒன்றிய பா.ஜ.க. அரசு மொழிவாரி மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதிலும், தாய்மொழியைத் துறக்கச் செய்து, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளை மக்களிடையே திணித்து அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கும் சதிச் செயலில் ஈடுபட்டு வருகிறது. 2014-ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்ததிலிருந்தே, தமிழ்நாட்டில் வடமொழித் திணிப்பை கல்வி நிலையங்களில் பாடத்திட்டம் வழியாகவும் இதர பல்வேறு வகைகளிலும் செய்து வருகிறது.

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டித்துள்ளார்!**

தற்போது ஒன்றிய அரசுப் பள்ளிகளில் (CBSE) 9-ஆம் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியைக் கற்க வேண்டும் எனும் திட்டத்தைச் செயல்படுத்திட ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

இதனைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

**மாணவர் அணி சார்பில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!**

எனவே, ஒன்றிய அரசின் இம்முயற்சிகளை தடுத்திட, கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி பா.ஜ.க. அரசின் ‘நீட்’ தேர்வு மற்றும் இந்தி, சமஸ்கிருத திணிப்பை கண்டிக்கும் வகையிலும், அவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும் தலைநகராம் சென்னை மாநகர், சைதையில் “கலைஞர் பொன்விழா வளைவு” அருகில், இன்று (ஜூன் 23 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில், தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் அனைத்து மாணவர் அணி நிர்வாகிகள் அலைகடலென திரண்டு பங்கேற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உயிர்க்கொல்லி நீட்தேர்வினை ஒழித்திடுவோம்!

வடமொழி திணிப்பை தடுத்திடுவோம்!

அண்ணா தந்த இருமொழி கொள்கையை போற்றிடுவோம்!

இவ்வாறு ஜெ.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ‘நீட்’ மறுதேர்விலும் முறைகேடு! 3 மாநிலங்களில் 32 பேர் கைது!

*புதுடெல்லி, ஜுன் 23-*

*உத்தரப்பிரதேசம், பீகார், தெலுங்கானா மாநிலங்களில் நடைபெற்ற நீட் மறுதேர்வில், ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபட்ட 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கடந்த மே 3 ஆம் தேதி நடந்த நீட் தேர்வின்போது, வினாத்தாள் கசிவு உள்ளிட்ட பல முறைகேடுகள் அம்பலமாகின. இந்த முறைகேடுகளுக்கு நாடு முழுவதும் எழுந்த கடும் எதிர்ப்பு காரணமாக நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு மறு தேர்வு அறிவிக்கப்பட்டது. இதற்கான மறு தேர்வு நேற்று முன்தினம் பிற்பகல் நாடு முழுவதும் பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது. இந்நிலையில், பீகார் மாநிலத்தின் லக்கிசராய் மாவட்டத்தில் உள்ள தேர்வு மையங்களில் அதிகாரிகள் சோதனை செய்த போது, உண்மையான மாணவர்களுக்குப் பதிலாக ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுத முயன்ற 9 பேரை போலீசார் கைது செய்தனர். மோசடிக்கு உடந்தையாக இருந்த பயோமெட்ரிக் ஆபரேட்டர்கள் மற்றும் இடைத்தரகர்கள் உள்ளிட்ட 12 பேரும் கைது செய்யப்பட்டனர். இதேபோல், உத்தரப் பிரதேசம், தெலுங்கானா மாநிலங்களில் நடைபெற்ற நீட் மறு தேர்வில், ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபட்ட 11 பேரையும் போலீசார் கைது செய்துள்ளனர். நீட் மறுதேர்வில், ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபட்டதாக இதுவரை மொத்தம் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

## மதுரை மேலூரில் உயர்கல்வித்துறை அமைச்சர்

# பெண் குழந்தைகளை கையாண்ட விதத்தால் சர்ச்சை !

*மதுரை, ஜுன் 23-*

*மதுரை மாவட்டம் மேலூரில் நடைபெற்ற மாரத்தான் நிகழ்ச்சியில் தமிழக அரசின் உயர்கல்வித்துறை அமைச்சரும், மேலூர் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏவுமான விஸ்வநாதன் பெண் குழந்தைகளை கையாண்ட விதம் சர்ச்சையாகி உள்ளது. ஓட்டப்பந்தயத்தில் பெண் குழந்தைகளுக்கு காலில் சொடுக்கு போட்டு விட்டதுடன், அவர்களின் கால்களை பிடித்து விட்டார். இதனை எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சிக்கிறர் கள்.*

*ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்ற பெண் குழந்தைகளிடம் அமைச்சர் தவறான முறையில் நடந்து கொண்டதாகக் கூறி, இணையத்தில் பலர் கடுமையான கண்டனங்களை பதிவிட்டனர். அமைச்சர் என்பதால் பெண் குழந்தைகளிடம் அதிக பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டாமா? குழந்தைகளுடன் பழகும் போது, அவர்களின் தனிப்பட்ட எல்லைகளையும், மரியாதைகளையும் மதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.*

*முதல்வர் விஜய் பிறந்த நாளையொட்டி மதுரை மாவட்டம் மேலூரில் அரசு உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் நேற்று மாரத்தான் போட்டி நடந்தது. இந்த விழாவினை உயர்கல்வித் துறை அமைச்சரும், மேலூர் காங்கிரஸ் எம்.எல்.ஏ.வுமான விஸ்வநாதன், தொடங்கி வைத்தார். தொடர்ந்து நடந்த கலை நிகழ்ச்சியில் விஜய்யின் சினிமா பாடல் ஒன்றுக்கு அமைச்சர் விஸ்வநாதன் மேடையில் ஆடினார்.*

*விழாவில் அமைச்சர் விஸ்வநாதன் பெண் குழந்தைகளை கையாண்ட விதம் சர்ச்சையாகி உள்ளது. இதனை சிலர் தவறு என்று விமர்சித்துள்ளார்.*